# 10 தம்மை உரையாடலுக்கு முன்னாயத்தம் செய்தல்?

## இலக்கு

*மாணவர்கள் தலைப்பை பற்றிய ஒரு கண்ணோட்டத்தை எவ்வாறு பெறுவது, எவ்வாறு தாய்மொழியில் வேண்டுமென்றே தம்மை வெளிப்படுத்துதல் பற்றி திட்டமிடக் கற்கவுள்ளனர். இப்பயிற்சி ஓர் எழுத்துருவைத் திட்டமிடும் பயிற்சிகளுக்கு நிகரான வாய்வழிப் பயிற்சிகளாக அமைகிறது. பார்க்கவும் "முதல்மொழியில் எழுத ஊக்கப்படுத்தல்" என்ற நூலில் #8-10, 13, அ ஆ1, 16. #11 மற்றும் #22 யும் பார்க்கவும்.*

தரம் 1 - 4

20 - 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- ஆசிரியர் கலந்துரையாடல் தலைப்பை அறிவிக்கின்றார் (எ.கா. "தாய் நாட்டிலும் இங்கும் ஓய்வுநேரம்" அல்லது "நான் 20 வருடங்களிற்கு பின்பு எங்கே வாழ்வேன்?").

- மாணவர்கள் கலந்துரையாடல் தலைப்புக்கு என்ன பங்களிப்பைச் செய்ய விரும்புகிறார்கள் என்பதை தனித்தனியாக திட்டமிடுவதற்கு 5-10 மணித்துளிகள் வழங்கப்படும். அவர்கள் நினைப்பதை குறிப்பாகவோ, ஓவியமாகவோ, மனவரைபடமாகவோ, சொற்கொத்தாகவோ எழுதவேண்டும். (சொற்கொத்துகள் மற்றும் மனவரைபடங்கள் பற்றிய கலந்துரையாடலுக்கு, "முதல்மொழியில் எழுத ஊக்கப்படுத்தல்" என்ற தொகுதியின் #8.1 மற்றும் #8.2 பார்க்கவும்.) உரையாடலுக்கு அவர்கள் தங்கள் எண்ணங்களையும் பங்களிப்புகளையும் எவ்வாறு என்ன ஒழுங்கில் சேர்க்கலாம் என்பது பற்றியும் மனங்கொள்ளவேண்டும்.




- இணையராக, மாணவர்கள் தம்முடைய எண்ணங்களைப் பகிர்வார்கள். தம்முடைய தாய்மொழியில் இணைப்பிடைச்சொற்கள் பற்றிய வினாக்கள் உட்பட, உறுதியற்றவைகள் பற்றிக் கலந்துரையாடுவர்.

- வகுப்பு முழுவதும் ஒரு சுற்றிலே வினாக்களைத் தெளிவு படுத்துவர். கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தலைப்புத் தொடர்பான அடிப்படைச் சொற்களஞ்சியத்தை பலகையில் எழுதலாம். முடியுமாயின், இதில் கருத்தாடல் பேச்சு முறைகளையும் உள்ளடக்கலாம், எடுத்துக்காட்டாக, "நான் இதை இப்படிப் பார்க்கிறேன்…", "என்னுடைய கருத்தில்…" முதலியன. (அறிமுக பகுதியில் #2இ பார்க்கவும்).

- வகுப்பில் எல்லோருமாக அல்லது சிறு குழுக்களாக மாணவர்கள் முன் அறிவிக்கப்பட்ட தலைப்பில் உரையாடலை நடத்துவர். இயல்பாக, கற்ற உரையாடல் விதிகளைக் கண்காணித்தே இது நடைபெறவேண்டும். (பார்க்கவும் #9)

- அதைத்தொடர்ந்து, உரைகள் மற்றும் மொழி தொடர்பான கருத்து வேறுபாடுகள் உள்ளிட்ட சிக்கல்களைப் பற்றிய ஒரு சிறிய கலந்துரையாடல் நடைபெறவேண்டும்.